# தியாகராஜ கீர்த்தனைகள்



PIONEER PUBLICATIONS

தொகுத்தவர்
நெ.சி. தெய்வசிகாமணி

# தியாகராஜ கீர்த்தனைகள்

**பயனீர் பப்ளிகேஷன்ஸ்**

33, மூன்றாவது தெரு, [illegible] நகர்,
(மகளிர் வைணவக் கல்லூரியின் பின்புறம்)
குரோம்பேட்டை, சென்னை 600 044.
(ரயில் நிலையத்திலிருந்து 10 நிமிட நடை)
இணைய முகவரி: dngpal@md3.vsnl.net.in
Pl. visit:- http://business.vsnl.com/pioneerpub

# தியாகராஜ கீர்த்தனைகள்

திரைப்படங்களும், தொலைக்காட்சிகளும், அழகுப் போட்டிகளும் மேற்கத்திய கலாச்சாரத்தையும் ஆடைக்குறைப்பு நாகரிகங்களையும் திணித்துக்கொண்டிருக்கையில் நம் இளைஞர்கள் கர்நாடக சங்கீதத்தில் ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்களுடைய ஆர்வத்தைப் பார்க்கையில் சந்தோஷம் மேலிடுகிறது. இவர்கள் இசையில் புதிது புதிதாய் ஏதேனும் செய்ய வேண்டுமென்று ஆர்வத்துடன் இருக்கிறார்கள். நிறைய உழைக்கிறார்கள். அசுர சாதகம் செய்கிறார்கள். தங்கள் கற்பனா சக்தியை நிறையப் பயன் படுத்துகிறார்கள். இவர்கள் எவ்வளவுதான் தமிழ் மற்றும் மற்ற மொழிப் பாடல்களை இவர்கள் கையாண்டாலும் இவர்களுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது தியாகய்யரின் கீர்த்தனைகள்தாம்.

தியாகய்யரின் பாடல்கள் காலத்தை வென்று நிலைத்து நிற்பதற்குக் காரணமே அவரது பாடல்களில் அமைந்துள்ள எளிமையும் அவர் ராமரின் மேல் கொண்ட அளவில்லாத பக்தியை அவற்றில் வெளிப்படுத்தியமையும் அவரது தன்னலமின்மையும்தான். அதனால்தான், தெலுங்கு மொழியில் இருந்தாலும் இவர் பாடல்கள் மொழி என்னும் வேலியைத் தாண்டி எல்லோராலும் ரசித்து அனுபவித்துப் பாராட்டப் படுகிறது.

இத்தகைய சிறப்பு மிக்க தியாகய்யரின் அத்தனை பாடல்களையும் வெளியிட வேண்டுமென்ற அவா எங்களுக்கு இருந்தாலும், கைபடக்கப் பதிப்பாக எனது தந்தையார் தொகுத்த சில பாடல்களை மட்டும் இங்கு வெளியிட்டுள்ளோம். மிகவும் பிரபலமான பாடல்களை இத்தொகுப்பில் சேர்த்திருப்பதால், நீங்கள் விரும்பும் பாடல் நிச்சயம் இதில் இருக்கும் என்று நம்புகிறோம். இந்தத் தொகுப்பை வாங்குவதன் மூலம் தியாகய்யரின் மீது உங்களுக்குள்ள பக்தி அதிகமானால் அது நீங்கள் எங்களுக்குத் தரும் பரிசு.

தொகுப்பிலுள்ள பாடல்களைப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் குருவிடம் பாடிக்காட்டுங்கள். அவர் ஏதேனும் திருத்தம் சொன்னால் திருத்திக்கொள்ளுங்கள். குருவில்லாதவர்கள்(ஆத்ம திருப்திக்காகப் பாடுபவர்கள்) மனத்தை முழுவதுமாகச் செலுத்திப் பாடுங்கள். ஏதேனும் குறையிருப்பின் எங்களை மன்னியுங்கள்.

–என். டி. நந்தகோபால்.